ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1724/21 - 2011 සැප්තැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2011.09.23

*1724/21 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

**ஊவா மாகாண மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கூட்டுறவு சங்கங்கள் நியதிச் சட்டம்**

*ஊவா மாகாண மாகாண சபையின் 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச்சட்டம் 71 ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாண மாகாண சபையின் வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர் விவகார, கூட்டுறவுத்துறை, உணவு வழங்கல் மற்றும் விநியோக அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்டு 2011.08.11 ஆந் திகதி ஊவா மாகாண மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டதுமான விதிகள்.*

*ஆர். எம். குமாரசிறி இரத்நாயக்க,*
*வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர் வழங்கல், நுகர்வோர்*
*விவகாரமும், கூட்டுறவுத்துறையும் மற்றும், உணவு வழங்கலும்*
*விநியோகமும் அமைச்சர்,*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*அமைச்சர் அலுவலகம்,*
*ஆர். எச். குணவர்தன வீதி,*
*பதுளை,*
*2011,செத்தெம்பர் 22.*

**2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டம்**

விதிகள்

1. இவ்விதிகள் 2011 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஒரு சங்கத்தின் பதிவு கோருகின்றஒவ்வொரு விண்ணப்பமும். பதிவு செய்தல்.

(I) பதிவாளரால் விதிக்கப்படும் அத்தகைய படிவத்தில் செய்யப்பட வேண்டும் ;

(II) சங்கத்தின் சகல ஆதி உறுப்பினர்களாலும் கையொப்பமிடல் வேண்டும். அல்லது அத்தகைய ஒரு சங்கத்தின் ஆதி உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்ட சங்கங்களாயின், அத்தகைய ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணை விதிகளினால், கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பெற்ற ஒருவரால் கையொப்பமிடப்படல் வேண்டும் ;

(III) கூட்டுறவுச் சங்கத்தின் உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான பொருளாதார இயலுதன்மை பற்றிய கூற்றும் சேர்த்து அனுப்பப்பட்டிருத்தல் வேண்டும்.

பதிவு செய்ய மறுத்தலுக்கு எதிராக அமைச்சருக்குச் செய்யப்படும் மேன்முறையீடு.

3. ஒரு சங்கத்தினைப் பதிவு செய்வதற்கு பதிவாளர் மறுக்குமிடத்து பதிவுகோரும் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டுள்ள எவரேனும் ஒருவர் அத்தகைய மறுப்புக்கு எதிராக அமைச்சருக்கு மேன் முறையீடு செய்யலாம். எனினும் இத்தகைய மேன்முறையீடானது, பதிவாளரால் அத்தகைய மறுப்பு அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் செய்யப்படல் வேண்டும்.

4. ஒரு சங்கத்தைப் பதிவு செய்ததன் பின்னர் பதிவாளர் –

(i) இவ் விதிகளின் முடிவில் தரப்பட்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் பதிவுச் சான்றிதழினையும் சங்கப் புத்தகங்கள் வைத்து வரப்படும் மொழியில் ஊவா மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் ஒரு பிரதியினையும் அதன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின் ஒரு பிரதியினையும் சங்கத்துக்கு அனுப்புதல் வேண்டும் ;

(ii) பதிவு விண்ணப்பப்பத்திரத்தோடு அனுப்பப்பட்ட துணைவிதிகளில் ஒரு பிரதியைக் கையொப்பமிட்டுச் சங்கத்துக்குத் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பு நிலை.

5. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் துணை விதிகள் விதிக்கலாகும் நிபந்தனைகளுக்கமைவாகவே அச்சங்கத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்படல் வேண்டும்.

6. ஏதேனும் ஒரு பதிவு செய்யப்பட சங்கம் வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினை, அச்சங்கத்தின் துணை விதிகள் விதிக்கலாகும் நிபந்தனைகளுக்கமைவாக, உறுப்பினராக அனுமதிக்கலாம்.

7. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எவரேனும் அச்சங்கத்துக்குக் கடனாளியாய் அல்லது தீர்க்கப்படாத கடனுக்குப் பிணையாளியாயிராவிடின், காரியதரிசிக்கு எழுத்தில் ஒரு மாத அறிவித்தல் கொடுத்து சங்கத்தினின்று விலகலாம்.

8. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் துணை விதிகள் விதிக்கலாகும் நியாயத்துக்கும் அதிற் கொடுக்கப்பட்டுள்ள முறைப்படியும் எவரேனும் உறுப்பினர் சங்கத்தினின்றும் அகற்றப்படலாம்.

9. சங்கத்தின் துணை விதிகளால் விதிக்கப்பட்ட உறுப்பினர் தகுதியுடைமையை இழந்த பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எவரேனும் அச்சங்கத்தின் உறுப்பினராக தொடர்ந்து இருக்க முடியாது அத்துடன் சங்கத்தின் நிர்வாக சபை அவருடைய பெயரை உறுப்பினர் இடாப்பிலிருந்து உடனே நீக்குவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

10. (i) மட்டுப்படுத்தப்படாது உத்தரவாதத்தினையுடைய பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின்றும் விலகியவருக்கு அல்லது தள்ளப்பட்டவருக்கு அவர் அல்லது அவருக்கு முன் சங்கத்தில் தொடர்பு கொண்டிருந்தவர், பங்குபணக் கணக்கில் கட்டிய தொகை, துணைவிதிகள் விதித்த காலம் கடந்ததன் பின்னர், வட்டியின்றித் திருப்பிக் கொடுக்கப்படும்.

(ii) மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதத்தினை உடைய பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின்றும் விலகியவர் அல்லது தள்ளப்பட்டவர், அவர் பங்குப்பணக் கணக்கில் கட்டிய தொகையை, அச்சங்க துணைவிதிகள் விதித்த நிபந்தனைகளுக்கமைவாகவன்றித் திரும்பப் பெறுவதற்கு உரித்துடையவராகார்.

உறுப்பினர் தொகை.

11. ஒரு தொடக்க நிலைச் சங்கத்தினைப் பொறுத்தவகையில் அதன் உறுப்பினர் தொகை மட்டுப்படுத்துப்படலாகாது. எனினும் ஒரு உற்பத்தியாளர், கைத்தொழில் அல்லது தொழிற் கூட்டுறவுச் சங்கம் அதன் நடவடிக்கைகளினதும் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் தன்மைக்குக் கவனஞ் செலுத்தி, அத்தகைய சங்கத்தின் பொருளாதார வளம் பெறுதன்மையினை உறுதிப்படுத்தற் பொருட்டு பதிவாளரின் அங்கீகாரத்துடன் அதன் உறுப்பினர் தொகையினை மட்டுப்படுத்தலாம்.

உறுப்பினர்களின் பதிவேடு (இடாப்பு).

12. பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் பின்வரும் விவரங்களைக் காட்டும் ஒரு பதிவேட்டினை வைத்து வரல் வேண்டும் :-

(i) ஒவ்வொரு உறுப்பினரின் பெயரும், முகவரியும், தொழிலும் அவருக்குள்ள பங்குகளின் தொகையும் ;

(ii) உறுப்பினரின் வயது ;

(iii) ஒவ்வொரு உறுப்பினரின் பெயரும், பதிவேட்டில் பதியப்பட்ட திகதி ;

(iv) உறுப்பினர் சங்கத்தைவிட்டு விலகிய திகதி ;

(v) ஒவ்வொரு உறுப்பினராலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் எவரேனும் இருப்பின் ;

(vi) ஒவ்வொரு உறுப்பினரின் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளம் ;

*பெயர் குறித்து நியமிக்கப்படுவர்.*

13. (i) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் எவரேனும் உறுப்பினர் கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 32 இன் நியமித்தும் செய்கின்ற ஒவ்வொரு நியமனமும் எழுத்தில் இருக்க வேண்டியதுடன் அத்தாட்சிப்படுத்தும் இரு சாட்சிகளின் முன்னிலையில் அவ்வுறுப்பினரால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) பங்கு முதலுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எவரும் ஒன்றுக்கு மேற்பட்ட பங்கு உடையவராயிருந்தாலொழிய ஒருவருக்கு மேற்பட்டவரை நியமித்தலாகாது.

(iii) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் உறுப்பினர் எவரும் ஒருவருக்கு மேற்பட்டவரை நியமிக்கும் பொழுது, ஒவ்வொருவருக்கும் செல்ல வேண்டிய பங்குத் தொகையை அல்லது கிடைக்கக்கூடிய பங்குகளின் எண்ணிக்கையின் விகிதசமத்தையும் சங்கத்தில்அவ்வுறுப்பினருக்குரிய வேறு ஏதேனும் உரிமையினைப் பங்கிடும் விதத்தினையும் நியமனஞ் செய்யும் போதே திட்டமாக கூற வேண்டும் ;

(iv) செய்யப்படும் ஒவ்வொரு நியமனமும் உறுப்பினர் பதிவேட்டில் பதியப்படல் வேண்டும் ;

(v) ஒரு பதிவு பெற்ற சங்கத்தின் உறுப்பினரின் பங்கின் பெறுமதியை அல்லது ஏதேனும் அக்கறையின் பெறுமதியை இறந்ததன் பின் அவரால் நியமிக்கப்பட்டவருக்குக் கையளிக்கும் விடயத்தில், அப்பங்கினது அல்லது அக்கரையில் பெறுமதியானது சங்கத்துணை விதிகள் மாறாக விதித்தாலன்றி அவ்வுறுப்பினர் குறித்த அப்பங்குக்கு அல்லது அக்கறைக்குக் கொடுத்த தொகையாயிருத்தல் வேண்டும் ;

(vi) சட்டப்படி பராயமடையாதவருக்குப் பணம் கொடுக்கப்படுமிடத்து, அவர் அல்லது அவரின் பாதுகாவலன் கொடுக்கும், பற்றுச் சீட்டு அப்பணம் தொடர்பில் சங்கத்தின் பொறுப்பை அகற்றுவதற்குப் போதிய விடுவிப்பாதல் வேண்டும்.

*குருவாங்குவதில் கட்டுப்பாடு.*

14. மட்டுப்படுத்தப்பட்ட அல்லது மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் உறுப்பினர் ஒருவர் (பதிவு செய்யப்பட்ட சங்கத்தைத் தவிர) பங்கு முதலின் ஐந்திலொரு பாகத்துக்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருக்கலாகாது.

*இலாபப் பங்கீடு.*

15. (i) பங்கு முதலில்லாத பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று பணத்தின் எப்பாகத்தையேனும் உறுப்பினருக்கு பங்கிலாபமாக அல்லது வேறு எவ்வழியிலும் பங்கீடு செய்யலாகாது ஆனால் இவ்விதி ஒரு சிக்கன சங்கத்தைப் பாதிக்காது ;

(ii) பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக அன்றிப் பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்றின் பணநிதி அல்லது அதன் ஒரு பகுதி பங்கிலாபமாகவோ அல்லது உறுப்பினர் கொள்வனவு இலாபமாகவோ அல்லது மிகையூதியமாகவோ உறுப்பினர்களுக்கோ அல்லது அலுவலருகோ பங்கீடு செய்யப்படலாகாது.

(அ) தேறிய இலாபம் கணக்கிடப்படுமுன் சங்கத்தின் முழுவருடச் செலவும் இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்படல் வேண்டும் ;

(ஆ) பதிவாளரின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும்.

(iii) கடன் கொடுத்தவருக்கு அல்லது வைப்புப் பணம் இட்டவருக்குக் கொடுக்குமதி இருக்கும் வரை, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று பங்கிலாபமாவது உறுப்பினர் கொள்வனவு லாபமாவது கொடுக்கலாகாது ;

(iv) செலுத்தப்பட்ட பங்கு முதல் மீது, பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று 10 வீதத்துக்கு மேற்பட்ட பங்குலாபம் கொடுத்தலாகாது ;

(v) வங்கி ஒழிந்த ஏனைய உறுப்பினரல்லாதவரிடமிருந்து கடன் அல்லது வைப்புப் பணம் அல்லது வேறு ஏதேனும் கடன் வசதிகள் ஏற்கும் வரை பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று.

(அ) பங்குலாபம் கொடுக்கக் கூடாதென்று ;

(ஆ) பதிவாளர் அல்லது விதித்த குறைந்த வீதத்தில் பங்குலாபம் கொடுக்க வேண்டுமென்று பதிவாளர் பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலம் பணிக்கலாம்.

உத்தரவாதத்தின் ஆகக்கூடிய எல்லை.

16. (i) பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் உறுப்பினரல்லாதவரிடமிருந்து கடனாக அல்லது வைப்புப் பணமாக அல்லது வேறு வகையில், பெறக்கூடிய ஆகக்கூடிய தொகையை சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் காலத்துக்குக்காலம் நிச்சயித்தல் வேண்டும்.

(ii) இவ்விதியின் பந்தி (1) இல் கொடுக்கப்பட்டுள்ளவாறு எல்லை விதிப்பது ஏதேனும் ஒரு குறித்த பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு கஷ்டம் விளைவிக்குமெனப் பதிவாளர் கருதுவாராயின், அவர் அவசியமெனக் கருதும் அத்தயை ஆகக்கூடிய தொகையினை, அத்தகைய சங்கத்துக்கு அத்தகைய காலத்துக்கென நிர்ணயிக்கலாம்.

பொதுக் கூட்டங்கள்.

17. (i) பின்வருவனவற்றை உள்ளடக்கியதான அவசியமான கருமங்களைச் செய்து முடித்ததற்கு பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு சங்கமும் துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் பொதுக் கூட்டங்களைக் காலத்துக்குக் காலம் கூட்டலாம்.

(அ) உறுப்பினரல்லாதவரிடமிருந்து கடனாக வைப்புப் பணமாக அல்லது வேறு வகையில் சங்கம் பெறக்கூடிய ஆகக்கூடிய தொகையை நிச்சயித்தல் ;

(ஆ) சம்பந்தப்பட்ட சங்கம் உறுப்பினருக்குக் கடன் வழங்குகின்ற கடனுதவி சங்கமாயின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுமதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய கடன் எல்லையை நிச்சயித்தல் ;

(இ) நிர்வாக சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல் ;

(ஈ) பதிவாளரின் அறிக்கையினையும் (ஏதேனும் இருப்பின்) பதிவாளரினால் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளரின் கணக்குக் கூற்றினையும் அறிக்கையினையும் ஆலோசித்தல்.

(ii) துணை விதிகள் குறிப்பாக வேறு விதம் விதித்தாலன்றி பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் ஆராயப்படும் விடயங்கள் அக்கூட்டத்துக்குச் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினரின் பெரும்பான்மையினரால் தீர்க்கப்படல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 6 (1) (அ) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்துள்ள அச்சங்க உறுப்பினர் ஒருவருக்கு ஒரு வாக்கு மாத்திரமுண்டு. வேறு ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்துள்ள பேராளர்கள் அத்தகைய பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணை விதிகளுக்கமைய வாக்கினைப் பிரயோகித்தல் வேண்டும்.

வாக்குகள் சமமாகவிருக்குமிடத்து, தலைவர் அறுதியிடும் வாக்கொன்றை உடையவராயிருத்தல் வேண்டும்.

(iii) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று தான் உறுப்பினராகவுள்ள பிரிதொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்குப் பின்வருவோரை பிரதிநிதியாக நியமித்தலாகாது :-

(அ) அச்சங்கத்திடமிருந்து, அல்லது பதிவு நீக்கஞ் செய்யப்பட்ட ஏதேனும் ஒரு சங்கத்தின் ஒழிப்போனிடமிருந்து அல்லது ஏதேனும் பதிவு செய்யப்பட்ட சங்கத்தினிடமிருந்து எடுத்த ஏதேனும் கடனை அல்லது கடன்களை, அத்தகைய ஒவ்வொரு சங்கத்தின் துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள கால எல்லைக்கு, அல்லது அவ்வாறு கால எல்லை விதிக்கப்படாதவிடத்து மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்குத் திருப்பிச் செலுத்தத் தவறியவர், அல்லது ;

(ஆ) வேறெவ்வழியிலும் அச்சங்கத்துக்கு அல்லது வேறு ஏதேனும் சங்கத்துக்கு அல்லது எவரேனும் ஒழிப்போனுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கத் தவறினவர்.

18. (i) பதிவாளர் அல்லது அவருடைய பொது அல்லது விசேட கட்டளை மூலம் அவருடைய அதிகாரம் பெற்றவர், எக்காலத்திலும், காலத்தையும் இடத்தையும் முறையையும் குறித்து ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தை அழைக்கலாம். அக்கூட்டத்தின் போது சமுகமாயிருந்த வாக்கு அளிக்கத்தக்கதான 10 அங்கத்தவர்களை அல்லது அவ் அங்கத்தவர்களால் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளை நிறைவெண்ணாக அமையும், சங்கத் துணை விதிகளின்படி முறையே கூட்டப்பெற்ற சங்கக் கூட்டத்துக்குள்ள துணைவிதிகளைத் திருத்துவதற்கான தத்துவம் உட்பட, சகல தத்துவங்களும் அக்கூட்டத்துக்கு இருக்கும். பொது கூட்டங்களை அல்லது நிர்வாக சபைக்கூட்டங்களை அழைத்தற்கும் கூட் டங்களுக்குச் சமுக மளித்தற்கும் பதிவாளருக்குரிய தத்துவம்.

(ii) பதிவாளர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் அளிக்கப்பெற்ற ஒருவர் எக்காலத்திலும் காலத்தையும் இடத்தையும் முறையையும் குறித்து நிர்வாக சபையின் கூட்டமொன்றினை அழைக்கலாம். அக்கூட்டத்தின் போது சமுகமளித்துள்ள உறுப்பினரின் தொகை, (மூன்றுக்குக் குறைந்தாலன்றி) நிறைவெண்ணாக அமையும், சங்க துணைவிதிகளின்படி முறையே கூட்டப்பெற்ற நிர்வாக சபைக் கூட்டத்துக்குள் சகல தத்துவங்களும் இக் கூட்டத்துக்கு இருக்கும்.

(iii) விதி 18 (i) இன் கீழ் விசேட பொதுக் கூட்டமொன்று அல்லது விதி 18 (ii) இன் கீழ் நிர்வாக சபைக் கூட்டமொன்று பதிவாளரால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற ஒருவரால் கூட்டப்படுமிடத்து, பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற ஒருவர் அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய புத்தகங்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கட்டளை இடுவதற்குத் தத்துவமுடையவராவர், அத்தகைய ஒவ்வொரு கட்டளையின்படி நடத்தல் சங்கச் செயலாளரின் கடமையாகும். விதி 18 (i) அல்லது 18 (ii) இன் கீழ் அழைக்கப்படும் ஏதேனும் கூட்டத்துக்கு பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் ஒருவர் தலைமை வகிக்கலாம்; ஆனால் அவருக்கு வாக்குரிமை இல்லை. வாக்குகள் சமமாக இருக்குமிடத்து தலைவருக்கு அறுதியிடும் வாக்கொன்றுண்டு ;

(iv) பதிவாளர் அல்லது அவரால் பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலம் எழுத்தில், அதிகாரம் அளிக்கப்பெற்ற ஒருவர் ஒரு பதிவுபெற்ற சங்கத்தின் பொதுக் கூட்டத்தின் போது அல்லது நிர்வாக சபைக் கூட்டத்தின் போது சமுகமளித்துப் பேசுவதற்கு உரித்துடையவராவார்.

எனினும், அத்தகைய ஒரு கூட்டத்தில் பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற ஒருவர் வாக்களித்தற்கு உரிமை அற்றவராவர்.

19. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும் ஒரு நிர்வாக சபையினை உடையதாயிருத்தல் வேண்டும். பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணை விதிகளின்படி சங்கமொன்றின் நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவோ இடை நிறுத்தப்படவோ, அகற்றப்படவோ இயலும். ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணைவிதிகள் ஒரு பிராந்திய அல்லது கிளை நிர்வாக சபைக்காக ஏற்பாட்டினை உடையதாக இருக்குமாயின், அத்தகைய பிராந்திய அல்லது கிளை நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர், துணைவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறைமைக்கமைய, தெரிவு செய்யப்படவோ இடைநிறுத்தப்படவோ அகற்றப்படவோ இயலும். மேற்றரப்பட்ட ஏற்பாடுகள் எங்கனமாயினும், ஒரு புதிய கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்படும் பொழுது பதிவாளர், அத்தகைய சங்கத்தின் தற்காலிக பணிப்பாளர் சபைக்கு நியமனஞ் செய்வதற்கும் அத்தகைய தற்காலிக பணிப்பாளர் சபையிலிருந்து அத்தகையோரை அகற்றுவதற்கும் தத்துவமுடையவராவர். பதிவாளரால் நியமனஞ் செய்யப்பட்ட தற்காலிகப் பணிப்பாளர் சபை, பொதுக் கூட்டமொன்றினதும் நிர்வாக சபையொன்றினதும், தத்துவங்களை உடையதாயிருத்தல் வேண்டும். எனினும் பதிவாளரால் இவ்வண்ணம் நியமிக்கப்பெற்ற ஒரு சபை 12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு இயங்குதலாகாது. நிர்வாக சபை.

20. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் துணைவிதிகளில் இதற்குமாறாக வேறு எங்கனமாயிருப்பினும், பதிவாளர் அதன் நிர்வாக சபைக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களை நியமிப்பதற்கும் அவர்களிடையே, தலைவரை அல்லது உப தலைவரை அல்லது இருவரையும் நியமிப்பதற்கும் தத்துவமுடையவராவார். இவ்வண்ணம் ஒரு தலைவரை அல்லது உபதலைவரை பதிவாளர் நியமிப்பாராயின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் அல்லது உப தலைவர் இதன் விளைவாக பதவியை இழப்பர்.

21. (i) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நிர்வாக சபைக்கு அல்லது பிராந்திய அல்லது கிளை நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பெற்ற ஒருவர் தாம் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியற்றவர் அல்லரென அச்சங்கத்தின் துணைவிதிகளிற் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கமைய உறுதியுரை செய்தல் வேண்டும்.

(ii) ஒரு நிர்வாக சபைக்கு அல்லது பிராந்திய அல்லது கிளை நிர்வாக சபைக்கு தெரிவு செய்யப்பட்ட ஒருவர் விதி 21 (i) உக்கமைய உறுதியுரை செய்து, அவ்வுறுதியுரை பொய்யானதெனக் காணப்படின், அத்தகைய ஒருவர் இத்தகைய பொய்யான உறுதியுரை காணப்பெற்ற திகதியிலிருந்து மூன்று வருட காலத்துக்கு ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தில் பதவி வகிப்பதற்குத் தகுதியற்றவராவர் .

22. (i) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் முன்னர் பெறப்பட்ட சங்கப் பொதுச் சபையின் அங்கீகாரத்துடனும் பதிவாளர் அங்கீகரிக்கலாகும், அத்தகைய வீதப்படியும் மாத்திரமே சம்பளமாவது தகைமைக் கொடையாவது அல்லது வேறு வேதனமாவது பெற்றுக்கொள்ளலாம்.

(ii) கடமையாற்றுங்கால், தான் பெற உரிமையில்லாத பணத்தைப்பெறும் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் அல்லது வேறு அலுவலர் அத்தகைய சகல பணத்தையும் சங்கத்துக்குத் திருப்பிச் செலுத்துமாறு பதிவாளரால் கோரப்படலாம்.

23. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக சபை, பொதுக் கூட்டத்துக்கென ஒதுக்கப்பட்டனவற்றை ஒழிந்த, சங்கத்தின் ஏனைய தத்துவங்கள், அச்சங்கத்தின் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் அல்லது துணைவிதிகளில் முறையே விதிக்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கும் மட்டுப்பாடுகளுக்கு அமைவாகப் பிரயோகிக்கலாம்.

24. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் நிர்வாக சபையின் பிறவற்றுள் பின்வருவனவும் உள்ளடங்கியனவாகும்.

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தையும் இவ்விதிகளையும் சங்கத்தின் துணைவிதிகளையும் நடைமுறை விதிகளையும் சங்கக் கருமங்கள் சம்பந்தமாகப் பதிவாளரால் வழங்கப்படும் ஏதேனும் பொதுப் பணிப்புரைகளையும் பின்பற்றுதல் ;

(ஆ) உண்மையானதும் சரியானதுமான கணக்குகளை வைத்தல் ;

(இ) சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிய உண்மையான கணக்குகளை வைத்தல் ;

(ஈ) சங்கத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பில் வைத்தற்கு ஒழுங்கு செய்தல் ;

(உ) உறுப்பினர் பதிவேட்டினைச் சரியாக வைத்து வருதல் ;

(ஊ) சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட இலாப நட்டக் கணக்கினையும் ஐந்தொகையினையும் கணக்காய்வாளர் அறிக்கையினையும் பதிவாளரிடமிருந்து இத்தகைய அறிக்கையினைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து இரண்டு மாதக் காலத்துக்கிடையில் சமர்ப்பித்தல் ;

(எ) புத்தகங்களைப் பரீசிலனை செய்ய அதிகாரமுள்ளவருக்கு அவற்றை பரிசீலனை செய்வதில் உதவி செய்தல் ;

(ஏ) சங்கம் உறுப்பினர்களுக்குக் கடன்கள் வழங்குவதாயின், கொடுக்கப்பட்ட நோக்கத்துக்குக் கடன்கள் பயன்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தல் ;

(ஐ) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 52 உக்கமைய பதிவாளரால் அறிவிக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.

25. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் அரசாங்கத்தின் அல்லது வேறு அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் முகவராகச் சேவையாற்றுவதாயின், அத்தகைய அதிகாரிகளினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைவாக அத்தகைய சேவைகளை ஆற்றுதல் சங்கத்தின் நிர்வாக சபையினதும் ஒவ்வொரு அலுவலரினதும் பணியாளரினதும் கடமையாகும்.

26. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக சபை தமது பணிகளை ஆற்றி கடமைகளையும் ஊக்கமாக நிறைவேற்றுவதுடன் சட்டத்தினையும், இவ் விதிகளையும், சங்கத்தின் துணை விதிகளையும் நடைமுறை விதிகளையும் சங்கத்தின் கருமங்கள் சம்பந்தமாகப் பதிவாளரால் வழங்கப்படும் ஏதேனும் பொதுப் பணிப்புரைகளையும் பின்பற்றுதல் வேண்டும். உரிய ஊக்கங்காட்டத் தவறியதன் விளைவாக அல்லது சட்டத்தினையும் இவ்விதிகளையும் சங்கத்தின் துணைவிதிகளையும் நடைமுறை விதிகளையும் பதிவாளரின் ஏதேனும் பொதுப் பணிப்புரைகளையும் பின்பற்றத் தவறியதன் விளைவாக, ஏற்பட்ட ஏதேனும் நட்டம் அல்லது தண்டத்துக்கு இந் நிர்வாக சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் தனித்தும் ஒருமித்தும் பொறுப்பாளியாக வேண்டும்.

27. ஒரு பதிவு செய்யப்பட்ட கடனுதவு சங்கத்தின் விடயத்தில் நிர்வாக சபையின் உறுப்பினர் சங்கத்துக்குக் கட்ட வேண்டிய மொத்தக் கடன் தொகை சங்கத் தொழில் முதலின் இருபத்தியைந்து வீதத்துக்கு மேற்படலாகாது எனினும் ஒரு சங்கத்தின் உறுப்பினர்களது உடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான நிதிகளை அச்சங்கம் கொண்டிருப்பதாகப் பதிவாளர் கருதுவாராயின், இவ்விதி அத்தகைய ஒரு சங்கத்துக்குப் பொருந்துவதாகாது.

28. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு அதிகார நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாகவன்றி, எவரேனும் ஒருவரை அச்சங்கத்தின் பணியாளராக நியமித்தலாகாது. அலுவலரும் பணியாளரும்.

29. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் பின்வருவனவற்றைக் குறித்து துணை விதிகள் வகுத்தல் வேண்டும். கட்டாய துணை விதிகள்.

(i) சங்கப்பெயர் ;

(ii) சங்கத்தின் பதிவு பெற்ற முகவர் ;

(iii) சங்கம் நிறுவப்பட்ட நோக்கங்கள் ;

(iv) சங்கப்பணம் உபயோகிக்கப்படக்கூடிய நோக்கங்கள் ;

(v) உறுப்பினருக்கான தகுதியுடைமை, உறுப்பினரைச் சேர்ப்பதற்குரிய நிபந்தனைகளும், அவர்களைத் தெரிவு செய்யும் முறையும் ;

(vi) உறுப்பினரது உத்தரவாதத்தின் தன்மையும் அளவும் ;

(vii) உறுப்பினர் சங்கத்தைவிட்டு விலகுதலும், தள்ளப்படுதலும், அன்னார்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய தொகை ஏதேனுமிருப்பின்;

(viii) சங்கத்தின் உறுப்பினரது பங்கை அல்லது வேறு அக்கறைகளை மாற்றுதல் ;

(ix) நிதிகள் திரட்டும் முறையும் வைப்புப் பணம் மீது கொடுக்கப்படக்கூடிய ஆகக்கூடிய வட்டி வீதமும் ;

(x) சங்கப் பொதுக் கூட்டங்களும் அவற்றை கூட்டும் முறையும் அவற்றின் தத்துவங்களும் ;

(xi) நிர்வாக சபை உறுப்பினரையும் சங்கத்தின் ஏனைய அலுவலரையும் நியமித்தல், இடைவிலக்கல், அகற்றுதல், நிர்வாக சபையினதும் ஏனைய அலுவலரினதும் தத்துவங்களும் கடமைகளும் ;

(xii) சங்க அலுவலர் ஒருவருக்குச் சங்கத்தின் பேரில் ஆவணங்களுக்குக் கையொப்பமிட அதிகாரமளித்தலானது, நிதிகளைத் திரட்டி உறுப்பினருக்குக்கடன்கொடுப்பதை ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நோக்கத்தை உட்சேர்த்திருப்பின் பின்வரும் மேலதிகமான விடயங்களைக் குறித்தும் துணை விதிகள் வகுக்க வேண்டும் ;

(xiii) உறுப்பினரின் தொழிலும், இருப்பிடமும் ;

(xiv) பின்வருவன உட்பட உறுப்பினருக்குக் கடன் கொடுப்பதை பற்றிய நிபந்தனைகள் :-

(அ) வட்டி வீதம் ;

(ஆ) ஒரு உறுப்பினருக்குக் கடனாகக் கொடுக்கக்கூடிய ஆகக்கூடிய தொகை ;

(இ) கடன் தவணையை நீடித்தலும் கடனைப் புதுப்பித்தலும் ;

(ஈ) கடனின் நோக்கங்கள் ;

(உ) கடனுக்குப் பின்.

(xv) பங்குகளின் அல்லது கடனின் கணக்கில் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுக்கத் தவறுவதின் விளைவுகள் :

(xvi) இலாபப் பங்கீடு செய்தல் .

நடைமுறை விதிகள்.

30. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம், அதன் துணைவிதிகளுக்கமைவாக, அவசியமெனக்கருதும், அத்தகைய நடைமுறை விதிகளை காலத்துக்குக் காலம் செய்யலாம் அத்தகைய நடைமுறை விதிகள் நிர்வாக சபையினையும் சங்கத்தின் ஒவ்வொரு அலுவலரையும் பணியாளரையும் கட்டுப்படுத்துவதாய் இருத்தல் வேண்டும்.

நட்டஈடு.

31. கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 28 (1) (ஆ) ஆம் பிரிவின் கீழ் வரும் உறுப்பினரிடமிருந்து ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் நட்டஈடாக அறவிடும் பணம், அவ்வுறுப்பினர் தனது உற்பத்திப் பொருள் முழுவதையும் அல்லது அதில் ஒரு குறித்த பாகத்தைச் சங்கத்தின் மூலம் விற்கத் தவறினமையால் சங்கத்துக்கு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஏற்பட்ட வியாபாரக் குறைவின் பேறான நட்டஈட்டாகவும், குறித்த உற்பத்திப் பொருளின் அக்கால விலையிலும் 10 வீதத்துக்கு மேற்படாததாயுமிருத்தல் வேண்டும்.

கடனை கழித் தெழுதுதல்.

32. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்குரிய கடனாவது வேறெவ்வித உரிமைப் பணமாவது, பொதுச் சபையின் முன் அங்கீகாரமின்றி கழித்தெழுதப்படவோ கணக்கினின்றும் நீக்கப்படவோ ஆகாது கடன் அல்லது உரிமைப்பணம் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையினதாயிருக்குமாயின், பதிவாளரினதும் பொதுச் சபையினதும் முன் அங்கீகாரமின்றி கழித்தெழுதப்படவோ கணக்கினின்றும் நீக்கப்படவோ முடியாது.

துணைவிதிகளின் திருத்தம்.

33. (i) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவுக்கும் இவ் விதிகளின் 29 ஆம் விதிக்கும் அமைவாக, ஒரு பதிவுபெற்ற சங்கம் தனது துணைவிதிகள் எவற்றையேனும் திருத்தலாம்.

(ii) பின்வரும் நிபந்தனைக்கமைவாக, சங்கத்தின் பொதுக் கூட்டத்தில் செய்யப்படும் தீர்மானமூலமாகவே துணை விதிகளிற் திருத்தம் செய்யப்படலாம்.

(அ) மட்டுப்படுத்தப்படாத உத்தரவாதமுடைய சங்கத்தைப் பொறுத்த வகையில், அரை வாசிக்குக் குறைவுபடாத உறுப்பினர் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்திருத்தல் வேண்டும். தீர்மானம், சமுகமளித்திருந்த உறுப்பினர்களின் நாலில் மூன்று பங்கினரின் வாக்குகளைப் பெறுதல் வேண்டும் ;

அல்லது

(ஆ) மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதமுடைய சங்கத்தைப் பொறுத்த வகையில் தீர்மானம் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்றுக்குச் சமுகமளித்து, வாக்களித்தற்கு உரித்துடைய மொத்த உறுப்பினரின் தெளிவான பெரும்பான்மை வாக்குகளை (இது எழுத்தில் இருக்கலாம்) பெற்றிருத்தல் வேண்டும். எழுத்துமூலம் வாக்களிக்கப்படுமிடத்து வாக்குச் சீட்டுக்கள் அத்தகைய ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்பப்பட்டு சங்க துணை விதிகளின்படி நிறைவெண்ணுள்ள பொதுக் கூட்டத்தில் பரிசோதித்து எண்ணப்படல் வேண்டும்.

(iii) மேற்தரப்பட்ட இவ்விதியின் ஏற்பாடுகள் எங்கனமாயினும் பதிவாளரால் முன்னர் அங்கீகரிக்கப்பெற்ற அல்லது விதந்துரைக்கப்பெற்ற ஏதேனும் துணைவிதியாவது அல்லது ஏதேனும் துணை விதியின் திருத்தமாவது, அத்துணைவிதியை அல்லது துணை விதித்திருத்தத்தைக் குறித்து ஆலோசிப்பதாக முறையே அறிவித்தல் கொடுக்கப்பட்ட சங்கப் பொதுக் கூட்டமொன்றில் சமுகமளித்து வாக்களிததற்கு உரித்துடைய உறுப்பினரின் மூன்றில் இரண்டு வீத பெரும்பான்மையோரின் வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்படலாம் ;

(iv) ஒரு துணை விதி உண்டாக்கப்பட்டவுடன் அல்லது திருத்தப்பட்டவுடன் அல்லது ஒழிக்கப்பட்டவுடன், ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் அத்துணை இவ்விதியின் இரண்டு பிரதிகளை விதியின் (ii) ஆம் பந்தியிலுள்ள அல்லது (iii) ஆம் பந்தியிலுள்ள ஏற்பாடுகள் நிறைவேற்றப்பட்டதை அத்தாட்சிப்படுத்தும் சங்கத் தலைவரினதும் காரியதரிசியினதும் கையொப்பங்களைப் பெற்ற பத்திரத்தோடு, பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

34. துணைவிதிகளை மீறும் உறுப்பினருக்குக் குற்றப்பணம் விதிப்பதற்கு ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் அதன் துணை விதிகளில் ஏற்பாடுகள் செய்யலாம். அத்தகைய துணை விதிகள் ஏனையவற்றுடன் பின்வருவனவற்றுக்குரிய ஏற்பாட்டினையும் கொண்டிருத்தல் வேண்டும். குற்றப்பணம் விதித்தல்.

(அ) அத்தகைய குற்றப்பணத்தை விதிக்கும் உட்கருத்து பற்றியும் அதற்கான காரணங்களையும் எழுத்தில் அறிவித்தல் ; இத்தகைய அறிவித்தல் பதிவுத் தபால் மூலம் உறுப்பினருக்கு சங்கப் புத்தகங்களில் காணப்படும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் அல்லது நேரடியாகச் சேர்ப்பித்தல் வேண்டும் ;

(ஆ) துணைவிதிகளை மீறியதான குற்றச்சாட்டுச் சம்பந்தமாக அத்தகைய ஒவ்வொரு உறுப்பினருக்கும் அதற்கான அவரது விளக்கத்தினைச் சமர்ப்பித்தற்குப் 14 நாட்கள் கொடுக்கப்படல் வேண்டும் ;

(இ) எவ்வித விளக்கமும் உறுப்பினரால் அளிக்கப்படாதவிடத்து, சங்கம் ரூபா 100 உக்கு மேற்படாததான குற்றப்பணத்தினை விதிக்கலாம் ;

(ஈ) உறுப்பினர் அதற்காய விளக்கத்தினைச் சமர்ப்பிப்பாராயின், முறையே கூட்டப்பெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் அவரது விளக்கம் ஆராயப்பட்டுத் தீர்மானமும் எடுக்கப்படல் வேண்டும். உறுப்பினர் விளக்கம் கொடுத்ததன் பின்னரும் குற்றப்பணத்தை விதிப்பதற்குத் தீர்மானஞ் செய்யப்படின், அத்தகயை குற்றப்பணம் ரூபா 100 உக்குக் கூடியதாக இருத்தலாகாது.

35. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் உறுப்பினரொருவரல்லாத ஆளெவருக்கும் எக்கடனையும் கொடுத்தலாகாது. எனினும் பதிவாளரின் முன் அங்கீகாரத்துடன் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் வேறொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு கடன்கள் கொடுக்கலாம். கடன் வழங்குவதில் மட்டுப்பாடு.

36. பதிவு செய்யப்பட்ட சங்கமொன்று, பதிவாளரின் முன்னங்கீகாரத்துடன், அதன் நிதிகளை ஏதேனும் பொது அல்லது தனியார் நிறுவகத்தில் முதலீடு செய்யலாம். எனினும் இத்தகைய முதலீட்டினைச் செய்ததற்கு உதவு முகமாக அத்தகைய பொது அல்லது தனியார் நிறுவனத்தில், குறித்த ஏற்பாடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சங்க நிதிகளை முதலீடு செய்தல்.

37. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும் பதிவாளர் விதிக்கலாம் அத்தகைய கணக்குப் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் வைத்து வருதல் வேண்டும். சங்கக் கணக்குகளை வைத்து வருவதற்குத் தகுதிவாய்ந்த ஆளணியினைச் சங்கம் கொண்டுள்ளதா என்பதையும் சங்கத்தின் கணக்குப் புத்தகங்கள் முறையே வைக்கப்பட்டு வருகின்றனவா என்பதையும் சங்கத்தின் அத்தகைய புத்தகங்களும் ஆவணங்களும் அன்றாடம் பேணப்பட்டு வருகின்றதா என்பதையும் கவனிக்க வேண்டியது நிர்வாக சபையின் கடமையாகும். கணக்குகள்.

சங்கத்தின் பல்வேறு கணக்குப் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் வைத்து வருபவர்களின் பெயர்களைக் கொண்ட பதிவேடு ஒன்றினை சங்கம் பேணி வருகின்றதா என்பதையும் நிர்வாக சபை கவனித்தல் வேண்டும். அத்தகைய ஒவ்வொருவரும் அத்தகைய கணக்குப் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் பாதுகாப்பதற்கும் பேணி வருவதற்கும் தாங்கள் பொறுப்பாளிகளென்பதை ஏற்றுக்கொள்ளும் வகையில் அத்தகயை பதிவேட்டில் முறையே கையொப்பமிடல் வேண்டும்.

கணக்குப் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் தினசரி சரியாகப் பேணி வருவதற்குத் தேவைப்படும் தகுதி வாய்ந்த ஆளணியினைச் சங்கத்துக்கு வழங்குதல் குறித்துத் திட்டமிட்டே கவனஞ் செலுத்தாது இருக்கின்ற அல்லது அத்தகைய கணக்குப் புத்தகங்களும் மற்றும் ஆவணங்களும் முறையே பேணப்பட்டு வருவதல் குறித்து உறுதிப்படுத் த தவறுகின்ற நிர்வாக சபை ஒரு குற்றத்தினைச் செய்துள்ள குற்றவாளியாகும்.

38. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும் உறுப்பினர் அல்லது வைப்புப்பணம் இட்டவர் அல்லது கடன் கொடுத்தவர் என்ற கோதாவில் சங்கப் பண நிலையில் கரிசனையுள்ளவருக்கு வருடாந்த ஐந்தொகையினைப் பரிசோதிக்க அனுமதியளித்தல் வேண்டும்.

39. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாகச் சபை அல்லது இதன்பொருட்டு நிர்வாக சபை நியமிக்கும் சங்கத்தின் ஒரு அலுவலர் பதிவாளர் இதன் பொருட்டு விதிக்கின்ற அத்தகைய படிவத்தில், பின்வருவனவற்றை வருடாந்தம் தயாரித்து, பதிவாளருக்கு, அவர் பணிக்கும் காலத்துக்குள் அனுப்புதல் வேண்டும்.

(i) ஒரு பரீட்சை மீதி ;

(ii) வருமானக்கூற்று ;

(iii) சொத்து மாற்றம் பற்றிய கூற்று ;

(iv) காசுப்பாய்ச்சல் கூற்று ;

(v) ஐந்தொகை ;

(vi) நிதிக் கொள்கையும் விரிவான குறிப்புகளும்.

சகல நிதிக் கூற்றுகளும் கணக்கீட்டுக்கொள்கைகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட வேண்டும். வருடாந்த நிதி அறிக்கையானது இயக்குநர் சபையினரின் பொறுப்புக்கள் உள்ளடங்கியதான அறிக்கையுடன் இணைந்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

40. (i) பதிவாளர் எழுத்தில் கட்டளைவிடுத்து ;

(அ) கட்டளையில் விதிக்கப்படலாகும் சங்கக் கணக்குகளையும் புத்தகங்களையும் தான்விதிக்கும் காலம் வரை எழுதுவிக்கும் படியும் ;

(ஆ) கட்டளையில் விதிக்கப்படலாகும் முறைப்படியும் காலத்துக்குள் தனக்கு வேண்டிய விவரத் திரட்டினை அனுப்பும்படியும் எந்தப் பதிவு செய்யப்பட்ட சங்கத்தையும் கேட்கலாம்.

(ii) ஏதேனும் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் (i) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பெற்ற ஒரு கட்டளைக்கமைய பின்பற்றத்தவறுமாயின், பதிவாளர், தான் அதிகாரமளித்த ஒருவரைக் கொண்டு கணக்குகளையும் புத்தகங்களையும் எழுதலாம் அல்லது விவரத் திரட்டினைத் தயாரிக்கலாம்.

பதிவாளர் அதிகாரமளிக்கப்பெற்ற ஒருவரால் ஒரு சங்கத்தின் கணக்குகளும் புத்தகங்களும் எழுதப்பெற்று விவரத் திரட்டும் தயாரிக்கப்பட்டிருக்குமாயின், அத்தகைய வேலைக்குச் செலுத்தக்கூடிய தொகையினைப் பதிவாளர் தீர்மானித்து, அத்தொகையினைச் செலுத்துமாறு சங்கத்தினைக் கேட்கலாம் அச்சங்கம் அவ்வண்ணம் செய்யத் தவறுமாயின் பதிவாளர் அவ்வட்டாரத்தில் நியாயாதிக்கமுடைய ஒரு நீதிவானுக்கு விண்ணப்பம் செய்து, அத்தொகையினை அறவிடலாம். அத்தொகையினைத் தன்னால் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணம் என்ற முறையில், அந்நீதிவான் அறவிடலாம்.

ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் புத்தகங்களை எழுதுவதற்கென பதிவாளரால் அதிகாரமளிக்கப்பெற்றவர் ஒரு அரச அலுவலராயிருப்பின் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட தொகை திரட்டிய நிதியின் கணக்கில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

கணக்காய்வு.

41. (i) பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் கணக்குகளைப் பதிவாளரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலர் ஒருவர் அல்லது பதிவாளரால் நியமிக்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளர், கணக்காய்வு செய்தல் வேண்டும். இவ்விதிகளின் நோக்கங்களுக்கு ஒரு உறுதிப்படுத்தப்பட்ட கணக்காய்வாளரானவர்–

(அ) ஒரு பட்டயம் பெற்ற கணக்காளர் அல்லது ஒரு பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனம் ; அல்லது

(ஆ) பதிவாளரால் பேணி வரப்படும் கணக்காய்வாளர் குழு அட்டவணையில் பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள ஒருவர் அல்லது ஒரு சபை.

(ii) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 51 (2) இன் கீழ் கணக்காய்வானது எச்சந்தர்ப்பத்திலும், முன்னைய கணக்காய்வின் இறுதித் திகதியில் ஆரம்பித்து கணக்காய்வுக்கு உடனடி முன்னதாகவுள்ள நிதியாண்டின் கடைசித் திகதிவரை செய்யப்படல் வேண்டும். அல்லது பதிவாளர் பணிப்பதற்கமைய, அவரால் குறிக்கப்படும் அத்தகைய மற்றைய திகதிவரை, கணக்காய்வு செய்யப்படல் வேண்டும் ;

(iii) குற்றவியல் நடவடிக்கைகள் நிமித்தம் தேவைப்படுமிடத்து, 12 மாதங்களுக்கு மேற்படாத காய எல்லைக்கு ஒரு விஷேட கணக்காய்வினைத் தயாரிக்குமாறு கணக்காய்வாளரால் பதிவாளர் கோரலாம் ;

(iv) ஒரு கணக்காய்வாளர் பதிவாளரால் குறிப்பிடப்படும் முறையில் கணக்காய்வு அறிக்கையொன்றினை இரு பிரதிகளில், பதிவாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது, ஏனையவற்றுடன், பின்வரும் தகவல்கள் அடங்கிய கூற்றினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(அ) அவரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டபடி, சகல தகவல்களையும் விளக்கங்களையும் பெற்றுள்ளாரா ;

(ஆ) கணக்குப் புத்தகங்கள் சங்கத்தினால் சரியாக வைக்கப்பட்டு வந்துள்ளனவா ;

(இ) சங்கத்தின் புத்தகங்களுடன் ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் ஒத்துள்ளதா,

(v) பதிவாளரால் விதிக்கலாகும் அத்தகைய சகல அட்டவணைகளையும் சான்றிதழ்களையும் கணக்காய்வாளர் தனது கணக்காய்வு அறிக்கையுடன் இணைத்தல் வேண்டும் ;

(vi) கணக்காய்வாளர், சங்கத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையுடன் பின்வரும் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி கணக்காய்வுச் சான்றிதழ் ஒன்றினையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நான்/நாங்கள் மட்டுப்படுத்தப்பட்ட/மட்டுப்படுத்தப்படாத ............................................ கூட்டுறவுச் சங்கத்தின்/சமாசத்தின் கணக்குகளைப் பரிசீலனை செய்து,மேற்படி பிரதி கொடுக்கப்பட்டுள்ள ஐந்தொகையினையும் கணக்காய்வு செய்துள்ளேன்/ளோம். நான்/நாங்கள் சங்கத்தின்/சமாசத்தின் அலுவலரிடமிருந்து என்னால்/எங்களால் கேட்டுக் கொள்ளப்பட்ட சகல தகவல்களையும் விளக்கங்களையும் (இவ்வறிக்கையின் ............................ஆம் பக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளவற்றைத் தவிர பெற்றுக்கொண்டேன் /டோம். நான்/ நாங்கள், ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல சொத்துக்களையும், பொறுப்புக்களையும் சரி பிழை பார்த்து இச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் உள்ளன எனவும் அவை பெறுமதிக்கு மேலதிக மதிப்பிடப்படவில்லையெனவும் நான்/நாங்கள் திருப்தியடைகிறேன்/றோம். எனது/எங்களது சிறந்த அபிப்பிராயத்தின் படியும், எனக்கு/ எங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தகவலினதும் விளக்கங்களினதும் பேரிலும், சங்கத்தின்/சமாசத்தின் புத்தகங்களில் காட்டப்பட்டுள்ளவாறும், சங்கக் கருமங்களது நிலைமையினை உண்மையாகவும் நேர்மையாகவும் எடுத்து காட்டக்கூடிய வகையில் ஐந்தொகை சரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

.................................................................
கணக்காய்வாளர்.

திகதி :....................................

42. பதிவாளர் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் முறையே பிரிவு 51, 53, 54 என்பவற்றின் கீழ்க் கணக்காய்வு விசாரணை பரிசோதனை அல்லது நுண்ணாய்வு செய்வதற்கு, பதிவாளரால் அதிகாரமளிக்கப்பெற்ற ஒருவர் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு, அத்தகைய கணக்காய்வு, விசாரணை, பரிசோதனை அல்லது நுண்ணாய்வு நடாத்துவதற்கு அவசியமென அவர் கருதுகின்ற அத்தகைய யாவரையும் அழைத்ததற்குத் தத்துவம் உடையவராவர். அழைப்புக் கட்டளைகள் நேரடியாகச் சேர்ப்பிக்கப்படலாம். அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம். எனினும், அவ்வண்ணம் அழைக்கப்படுபவருக்குக் குறைந்த பட்சம் ஏழு முழு நாள் அறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும். அழைத்தற்குரிய தத்துவம்.

43. (i) கூட்டுறவுச் சங்க நியதிச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட கூட்டுறவு நிதி, இந்நியதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் தத்துவங்களுக்கமைய அமைச்சரால் பிரகடனப்படுத்தப்படும் ஏதேனும் பொது அல்லது விசேட பணிப்புரைகளுக்கமைவாக, ஆட்சி செய்யப்படுதல் வேண்டும். பதிவாளர் அந்நியதியில் வரவு வைக்கப்பட்டுள்ள பணத்தினைப் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம் :- கூட்டுறவு நிதி.

(அ) கூட்டுறவுக் கல்வி, விசாலிப்பும் பிரசித்தப்படுத்தலும் ;

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைத் திறமைகளை மேல் விருத்தி செய்தல் ;

(இ) இயங்குகின்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளித்தல்.

(ii) ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும், பதிவாளரால் கேட்டுக் கொள்ளப்படுமிடத்து, பதிவாளரால் தீர்மானிப்பதற்கமைய ரூபா 100 உக்கு குறையாததும் சங்கத்தின் தேறிய வருடாந்த இலாபங்களின் பத்து வீதத்துக்கு மேற்படாததுமான அத்தகைய தொகைகளை வருடாந்தம் உதவு தொகையாகக் கூட்டுறவு நிதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

மேல் மிகை நிதி.

44. (i) இதனகத்துப்பின் மேல் மிகை நிதியெனக் குறிப்பிடப்படுகின்ற ஒரு நிதி கூட்டுறவுச் சங்கங்களின் நியதிச் சட்டத்தின் பிரிவு 67 (3) இன் நோக்கங்களுக்காகப் பதிவாளரால் பேணப்பட்டு வருதல் வேண்டும்.

(ii) மேல் மிகை நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள பணம் பதிவாளரால்,-

(அ) ஒரு பதிவு செய்யப்பட்ட தொடக்க நிலைச் சங்கத்துக்கு அச்சங்கத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் அல்லது பதிவாளர் தீர்மானிப்பதற்கமைய வேறு அத்தகைய முறையினில் உதவி அளித்தற்கும் ;

(ஆ) மாவட்டத்தின் பேரில் சேர்ந்துள்ள மேல் மிகை நிதியை அம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட ஏதேனும் சங்கம் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு உதவி அளித்தற்கும் ;

(இ) ஒரு ஒழிப்போனுக்கு அவருக்கு எதிரான ஏதேனும் குடியியல் நடவடிக்கைகளின் போது அவர் சார்பில் எதிர்வாதம் செய்வதற்கு அவருக்கு உதவும் பொருட்டும் ;

(ஈ) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 6 (1) (இ) இனதும் (ஈ) இனதும் பிரகாரம் அமைக்கப்பெற்ற ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்துக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு உதவியளித்தற் பொருட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவகத்துக்கு உதவி அளித்தற்கும் பயன்படுத்தலாம்.

பதிவுகளின் பிரதிகள்.

45. கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 36 (1) இன் நோக்கத்துக்காக, ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கப் புத்தகப் பதிவின் பிரதி, அதன் அடியில், எழுத்தில் செய்யப்படும் உறுதிமொழி மூலம் அத்தாட்சிப்படுத்தப்படலாம் இவ்வுறுதி மொழியானது குறித்த பிரதி உண்மையான பிரதியென்றும், அப்பதிவுள்ள புத்தகம் இன்னும் சங்கத்தின் பொறுப்பிலுண்டெனவும் கூறுவதால் அமைதல் வேண்டும். அவ்வுறுதி மொழி சங்கத் தலைவராலும் நிர்வாக சபை உறுப்பினர் ஒருவராலும் திகதியிடப்பட்டுக் கையொப்பமிடப்படல் வேண்டும்.

ஒதுக்கு நிதி.

46. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஒதுக்கு நிதி, பதிவாளர், சிறப்புக் கட்டளைமூலம், கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 46 ஆம் பிரிவுக்கமைய முதலீடு செய்யுமாறு பணிக்காதவிடத்து அத்தகைய சங்கத்தின் தொழிலில் பயன்படுத்தப்படலாம்.

47. ஒதுக்கு நிதி பிரிக்கப்படாதிருத்தல் வேண்டும். உறுப்பினர் எவருக்கும் அதில் எப்பங்கும் உரித்தாகாது.

சங்கப் பணத்தைக் கொண்டு நிலம் முதலியன கொள் வனவு செய்தல்.

48. (i) ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் பொதுச் சபையின் அங்கீகாரமின்றியும் பதிவாளரிடமிருந்து முன்னர் எழுத்தில் பெறப்பட்ட அங்கீகாரமின்றியும் வியாபாரப் பொருளிருப்பு தவிர 50,000 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியினையுடைய ஏதேனும் அசைவுள்ள ஆனத்தினைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தலாகாது.

(ii) ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் பொதுக் கூட்டத்தின் அங்கீகாரத்துடனும் முன்னர் எழுத்தில் பெற்றுக்கொள்ளப் பெற்ற பதிவாளரின் அங்கீகாரத்துடனும், அதன் குறிக்கோள்களுடன் சம்பந்தமான ஏதேனும் நோக்கத்தின் பொருட்டு, காணிகள், கட்டிடங்கள் அல்லது வேறு அசைவுற்ற ஆதனத்தினைக் கொள்வனவு செய்வதால், நன்கொடையாகப் பெறுவதால் அல்லது வேறு வகையாகக் கொள்வனவு செய்யலாம் அல்லது குத்தகைக்கு எடுக்கலாம் அல்லது காணிகளை கட்டிடங்களை அல்லது வேறு அசைவற்ற ஆதனத்தினை விற்பனை செய்யலாம் ஈடு வைக்கலாம், குத்தகைக்கு விடலாம், கொடுத்து மாறலாம் அல்லது வேறு வகையாகக் கையளிக்கலாம்.

பிணக்குகள்.

49. (i) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 68 ஆம் பிரிவின் கீழ் பதிவாளரின் தீர்ப்புக்காக அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டிய பிணக்குகள் சம்பந்தமாக :

(அ) பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாக சபை ; அல்லது

(ஆ) ஒரு பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மூலமாக பதிவு செய்யப்பட்ட சங்கம் ; அல்லது

(இ) பிணக்கிற்கான ஒரு திறத்தார் ; அல்லது

(ஈ) நிர்வாக சபை உறுப்பினர் அல்லது பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் வேறு அலுவலர் கொடுக்க வேண்டிய பணம் சம்பந்தமான பிணக்காக இருப்பின் பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஒரு உறுப்பினர் விண்ணப்பம் செய்யலாம்.

(ii) கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவு 68 (1) இன் கீழ் பதிவாளருக்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய ஏதேனும் ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் கோரிக்கை விதி 49 (i) இன் கீழ் அவ்வண்ணம் செய்வதற்குத் தகுதியுடைய ஒருவரால் பதிவாளருக்கு ஆற்றுப்படுத்தப்படாமல் இருக்குமிடத்து, அத்தகைய கோரிக்கையினின்றும், எழக்கூடிய ஏதேனும் பிணக்கு அச்சங்கம் சம்பந்தப்பட்ட வகையில், கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் கணக்காய்வு செய்துள்ள ஒருவரால் அல்லது 53 ஆம் பிரிவின் கீழ் விசாரணை நடாத்தியுள்ள ஒருவரால் அல்லது 54 ஆம் பிரிவின் கீழ் பரிசோதனை அல்லது நுண்ணாய்வு நடாத்தியுள்ள ஒருவரால் அத்தகைய சங்கத்தின் சார்பில், பதிவாளருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம் ;

(iii) பிணக்கினைத் தீர்ப்பதில் ஏற்படலாகும் செலவு முழுவதையும் அல்லது அதில் ஒரு பாகத்தை முற்பணமாகக் கட்டும்படி பதிவாளர் வழக்காளியின் இடத்திலுள்ள திறத்தாரைக் கேட்கலாம்.

(iv) நிர்வாக சபை உறுப்பினர் அல்லது வேறு அலுவலர் கொடுக்கவேண்டிய பணம் சம்பந்தமான ஒரு பிணக்கு அப்பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் ஒரு உறுப்பினரால் பதிவாளரிடம் அவர் தீரமானத்துக்காக ஆற்றுப்படுத்தப்படுமிடத்து, அல்லது விதி 49 (ii) இன் கீழ் ஒருவரால் ஒரு பிணக்கு பதிவாளருக்கு ஆற்றுப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய உறுப்பினர் அல்லது அத்தகைய ஒருவர் அப்பிணக்கு சம்பந்தமான சகல நடவடிக்கைகளையும் பொறுத்தவகையில் சங்கத்தின் பேரில் நடவடிக்கை எடுத்தற்கு அதிகாரமுடையவராதலுடன் அப்பிணக்கில் சம்பந்தப்பட்ட சகல சங்கப் புத்தகங்களையும் ஆவணங்களையும் பார்வையிடுதற்கும், அது சம்பந்தமாக அவருக்கு ஏற்படலாகும் நியாயமான செலவுகளுக்குச் சங்கத்தினிடமிருந்து பணம் பெறவும் அவ்வுறுப்பினருக்கு உரிமையுண்டு.

ஒரு பிணக்கிற்கான ஒரு திறத்தாரைத் தடுக்கின்ற எவரும் அல்லது ஒரு பிணக்கிற்கான ஒரு திறத்தாரின் சார்பில், எவ்விதத்திலேனும் நடவடிக்கை எடுக்கும் ஒருவர் ஒரு குற்றத்தினைச் செய்துள்ள குற்றவாளியாவர்;

(v) (அ) பதிவாளர் ஒரு பிணக்கினை ஒரு நடுத்தீர்ப்பாளருக்கு ஆற்றுப்படுத்தத் தீர்மானிப்பாராகில், அந்நடுத்தீர்ப்பாளர் பதிவாளரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) விதி 49 (எ) (V) இன் கீழ் நடுத்தீர்ப்பாளராக நியமிக்கப்படும் ஒருவர் இறந்தால் அல்லது மறுத்தால் அல்லது அலட்சியம் செய்தால் அல்லது நடுத்தீர்ப்பாளராகக் கடமையாற்றுவதற்குத் தகுதியற்றவரெனப் பதிவாளரால் காணப்பெற்றால் அல்லது சமுகமளிக்காமை அல்லது சுகயீனம் அல்லது வேறு எக்காரணத்தினாலேனும் அக்கருமமாற்றுந் தகுதியுடைமையை இழந்தால், பதிவாளர், அவ்வண்ணம் தகுதி இழந்த அல்லது மறுத்த அல்லது அலட்சியஞ் செய்த அல்லது கருமமாற்றும் தகுதியற்றவரெனக் காணப்பட்ட அல்லது நடுத்தீர்ப்பாளராகக் கடமையாற்றுவதற்கு, சமுகமளிக்காமை அல்லது சுகயீனம் அல்லது வேறு எக்காரணத்தினாலேனும் தகுதியுடைமையை இழந்த ஒருவருக்கு பதிலாக வேறொருவரை நியமித்தல் வேண்டும் ;

(இ) விதி 49 (V) (அ) இன் கீழ் பதிவாளரால் நியமிக்கப்பட்ட நடுத்தீர்ப்பாளர், அதன் பேரில் நடுத்தீர்ப்புக்கு, உடனடியாக விசாரணையினைப் பூரணமாக முடித்து, அவரது அத்தகைய நியமனத்திலிருந்து 3 மாத காலத்திற்குள் தீர்ப்பினை வழங்குதல் வேண்டும். எனினும் இவ்வண்ணம் நியமிக்கப்பெற்ற ஒரு நடுத்தீர்ப்பாளர், அத்தகைய காலத்திற்குள் விசாரணையைப் பூரணமாக முடித்துத் தீர்ப்பிணை வழங்க முடியாமலிருப்பாராயின், குறித்த 3 மாத காலத்திற்குள் தீர்ப்பினை வழங்க முடியாமற் போனதற்காய காரணங்களையும் விசாரணையைப் பூரணமாக முடித்து, தீர்ப்பு வழங்குவதற்கு, மேலும் தேவையென அவர் கருதுகின்ற அக்கால அளவினையும் பதிவாளருக்கு அறிவித்தல் வேண்டும். பதிவாளர் தான் அவசியமெனக் கருதுகின்ற அத்தகைய கால நீடிப்புக்கு அனுமதி வழங்கலாம் ;

(ஈ) மேற்குறித்த ஏதேனும் காரணங்களின் நிமித்தம் நடுத்தீர்ப்பினை நடாத்துவதற்கு ஒரு நடுத்தீர்ப்பாளருக்கு இயலாமலிருக்குமிடத்து அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அத்தகைய சகல பத்திரங்களையும் ஆவணங்களையும் பதிவாளருக்கு திருப்பி அனுப்புதல் வேண்டும் ;

(உ) ஒரு நடுத்தீர்ப்பாளரும், பிணக்கிற்கான ஒரு திறத்தார் சமுகமளிக்காததன் காரணமாக, மாத்திரம், ஒரு கோரிக்கையினை நிராகரித்தலாகாது. முறையே, அழைப்புக் கட்டளை வழங்கப்பட்ட, பிணக்கிற்கான எத்திறத்தாரும் சமுகமளிக்காவிடின், நடுத்தீர்ப்பாளரானவர் அத்திறத்தாரின்றியே அப்பிணக்கு பற்றித் தீர்மானித்து, தீர்ப்பினையும் வழங்கலாம். எனினும், ஒரு பிணக்கு பற்றி முதற் திகதியிலேயே, ஒரு பக்கமாக தீர்மானஞ் செய்தலாகாது.

(vi) ஒரு பிணக்கினை ஒன்றுக்கு மேற்பட்ட நடுத்தீர்ப்பாளர்களுக்கு ஆற்றுப்படுத்தப் பதிவாளர் தீர்மானிப்பாராயின் அவர், மூன்று நடுத்தீர்ப்பாளர்களைக் கொண்ட சபையொன்றினை நியமித்தல் வேண்டும். இவர்களுள் ஒருவர், ஒவ்வொரு திறத்தாராலும் நியமிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மூன்றாமவர் பதிவாளரால் நியமிக்கப்பட்டு அச்சபையின் தலைவராகக் கடமையாற்றுதல் வேண்டும் ;

(vii) (அ) விதி 49 (vi) இன் கீழ் ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்க வேண்டியுள்ள ஒரு பிணக்கிற்கான ஒரு திறத்தார் பதிவாளரால், அவ்வண்ணம் செய்யுமாறு கோரப்படுமிடத்துப் பதினைந்து நாட்களுள் அவ்வண்ணம் நியமித்தற்குத் தவறுவாராயின், அவருக்குப் பதிலாக பதிவாளர் ஒருவரை நியமனம் செய்யலாம் ;

(ஆ) ஒரு பிணக்கிற்கான ஒரு திறத்தாரால் நியமிக்கப்பட்ட ஒருவர் இறந்தால் அல்லது மறுத்தால் அல்லது அலட்சியம் செய்தால் அல்லது நடுத்தீர்ப்பாளராகக் கடமையாற்றுவதற்குத் தகுதியற்றவரெனப் பதிவாளரால் காணப்பட்டால் அல்லது சமுகமளியாமை அல்லது சுகயீனம் அல்லது வேறு எக்காரணத்தினாலேனும் அவ்வண்ணம் கடமையாற்றுவதற்காக தகுதியுடைமையை இழந்தால், அவ்வண்ணம் இறந்த, அல்லது மறுத்த அல்லது அலட்சியம் செய்த அல்லது கடமையாற்றுவதற்குத் தகுதியற்றவரெனக் காணப்பட்ட அல்லது சமுகமளியாமை அல்லது சுகயீனம் அல்லது வேறு எக்காரணத்தினாலேனும் நடுத்தீர்ப்பாளராகக் கடமையாற்றுவதற்காக தகுதியுடைமையை இழந்த ஒருவருக்குப் பதிலாக ஒரு நடுத்தீர்ப்பாளரை நியமிக்கும்படி பதிவாளர் அத்திறத்தாரைக் கோருவார். பதினைந்து நாட்களுள் அத்திறத்தார் அவ்வண்ணம் நியமித்தற்குத் தவறுவாராயின் பதிவாளர் வேறொருவரை நடுத்தீர்ப்பாளராக நியமிக்கலாம் ;

(இ) பதிவாளர் நியமிக்கும் நடுத்தீர்ப்பாளர் இறந்தால் அல்லது மறுத்தால் அல்லது அலட்சியம் செய்தால் அல்லது நடுத்தீர்ப்பாளராகக் கடமையாற்றுவதற்குத் தகுதியற்றவரென பதிவாளர் அறிந்து கொண்டால் அல்லது சமுகமளியாமை சுகயீனம் அல்லது வேறு எக்காரணத்தினாலேனும் அவ்வண்ணம் கடமையாற்றுவதற்கான தகுதியுடைமையை இழந்தால் அவ்வண்ணம் இழந்த அல்லது மறுத்த அல்லது அலட்சியம் செய்த அல்லது கடமையாற்றுவதற்குத் தகுதியற்றவரென பதிவாளர் அறிந்து கொண்ட அல்லது சமுகமளியாமை அல்லது சுகயீனம் அல்லது வேறு எக்காரணத்தினாலேனும் நடுத்தீர்ப்பாளராகக் கடமையாற்றுவதற்காய தகுதி உடைமையை இழந்த ஒருவருக்குப் பதிலாகப் பதிவாளர் வேறொருவரை நடுத்தீர்ப்பாளராக நியமித்தல் வேண்டும்.

(viii) எத்திறத்தாரும் ஒரு நியாயவாதியை நடுத்தீர்ப்பாளராக நியமித்தலாகாது ;

(ix) இவ்விதியின் கீழ்ப்பட்ட நடவடிக்கைகளில் பதிவாளர் அல்லது நடுத்தீர்ப்பாளர் அல்லது நடுத்தீர்ப்பாளர்கள் :

(அ) சத்தியம் பண்ணுவிக்கலாம் ;

(ஆ) இரு திறத்தாரையும் சாட்சிகளையும் சமுகமளிக்கும்படி கட்டளையிடலாம், வாக்கால் பிறப்பித்த அல்லது நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட அல்லது சங்கத் தொழிற் பரப்பில் நியாயாதிகாரமுள்ள அண்மையிலுள்ள குடியியல் நீதிமன்றம் மூலம் அனுப்பப்பட்ட அழைப்புக் கட்டளை மூலம் வேண்டிய சகல புத்தகங்களையும் ஆவணங்களையும் சமர்ப்பிக்குமாறு கோரலாம் ;

(இ) விதி 49 (i) (ஈ) இன் கீழ் அல்லது 49 (ii) இன் கீழ் ஒரு பிணக்கினைத் தீர்ப்புக்காக ஆற்றுப்படுத்துகின்ற ஒருவரது அல்லது திறத்தார்களது செலவுகள் உட்பட்ட பிணக்கினைத் தீர்ப்பதில் ஏற்பட்ட செலவுகள், அவர் (பதிவாளர் அல்லது நடுத்தீர்ப்பாளர்) அல்லது அவர்கள் தகுந்ததெனக் கருதும் பிரகாரம், சங்க நிதியிலிருந்து அல்லது பிணக்கின் ஒரு அல்லது பல திறத்தாரால் கொடுக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கலாம்.

(x) பதிவாளர் அல்லது நடுத்தீர்ப்பாளர் அல்லது நடுத்தீர்ப்பாளர்கள் இரு திறத்தாரினதும், சமுகமளிக்கும் அன்னாரின் சாட்சிகளினதும் வாக்குமூலங்களைக் கேட்டு, அவற்றைக் கொண்டும், எத்திறத்தாராவது சமர்ப்பிக்கும் ஆவண அத்தாட்சியைக் கவனித்தும் நீதிக்கும், நியாயத்துக்கும் மனச்சாட்சிக்கும் ஏற்ப, சந்தர்ப்பத்துக்கேற்றவாறு, அத்தகைய தீர்மானத்தினை அல்லது தீர்ப்பினை வழங்குதல் வேண்டும். நடுத்தீர்ப்பாளரது அல்லது நடுத்தீர்ப்பாளர்களின் தீர்ப்பு எழுதப்பட்டு, சமுகமளித்துள்ள திறத்தாருக்கு அறிவிக்கப்பட்டு, பதிவாளரின் அலுவலகத்துக்கு அல்லது அவர் பணிப்பதன் பிரகாரம் அவருக்குக் கீழமைந்த அலுவலருக்கு வழக்குப் பதிவுச் சுவடியுடன் அனுப்பப்படல் வேண்டும் ;

(xi) மூன்று நடுத்தீர்ப்பாளர்களால் ஒரு விடயம் தீர்மானிக்கப்படுமேயாயின் பெரும்பான்மையினரின் அப்பிப்பிராயத்தின்படி, தீர்ப்பளிக்கப்படல் வேண்டும் அல்லது மூன்று நடுத்தீர்ப்பாளர்களும் வெவ்வேறு அபிப்பிராயத்தினைக் கொண்டிருப்பாளர்களாயின் சபைத் தலைவரது அபிப்பிராயத்துக்கமையத் தீர்ப்பளிக்கப்படல் வேண்டும் ;

(xii) (அ) நடுத்தீர்ப்பாளரின் அல்லது நடுத்தீர்ப்பாளர் குழுவின் தீர்ப்புக்கு மாறாகப் பதிவாளருக்குச் செய்யப்படும் ஒவ்வொரு மேன்முறையீட்டு விண்ணப்பமும், அதற்கான காரணங்களுடன், எழுத்தில் தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுள் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு அத்தகைய மேன்முறையீட்டு விண்ணப்பத்துடனும், அத்தகைய விண்ணப்பம், அவர்களுக்கு மாறாக தீர்ப்பு வழங்கப்பெற்ற திறத்தாரால் அனுப்பப்பட்டதாயிருக்கு மிடத்து, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தில் 63 (3) ஆம் பிரிவின்படி அத்தொகை விண்ணப்பத்துடன் அனுப்பப்படல் வேண்டும் ;

(ஆ) மேலே கொடுக்கப்பட்டுள்ளதற்கமைய அனுப்பப்படாத மேன்முறையீட்டு விண்ணப்பம் பதிவாளரால் நிராகரிக்கப்படுதல் வேண்டும் ;

(இ) பதிவாளர் பிணக்கிற்கான ஒரு திறத்தாரையேனும் விசாரணை செய்யாது, அம்மேன்முறையீடு குறித்துத் தீர்மானம் செய்யலாம் ;

(ஈ) மேன்முறையீட்டாளர் அவ்வண்ணம் மேன்முறையீடு செய்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன எனப் பதிவாளர் திருப்தியடைவாராயின், அவரால் வைப்புச் செய்யப்பட்ட பணம் அம்மேன்முறையீட்டாளருக்கே திருப்பி அனுப்பப்படுதல் வேண்டும் ;

(உ) மேன்முறையீட்டாளர் அவ்வண்ணம் மேன்முறையீடு செய்வதற்கு நியாயமான காரணங்கள் இருக்கவில்லையெனப் பதிவாளர் திருப்தியடைவாராயின், அம்மேன்முறையீட்டு வைப்புப்பணம் அம்மேன்முறையீட்டாளருக்குத் திருப்பியனுப்பப்படாமல் மாகாண சபை நிதியில் வரவு வைக்கப்படல் வேண்டும்.

(xiii) பதிவாளருக்கு முன் அல்லது நடுத்தீர்ப்பாளருக்கு அல்லது நடுத்தீர்ப்பாளர்களுக்கு முன் நடைபெறும் நடுத்தீர்ப்பு விசாரணையின்போது எத்திறத்தாரும் நியாயவாதியை ஏற்படுத்தக் கூடாது.

50. கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச்சட்டத்தின் பிரிவு 51 இன் கீழ் ஏதேனும் மேன்முறையீடு பற்றிய மாகாண கூட்டுறவு அமைச்சின் செயலாளரின் கட்டளை முடிவானதாகும். செயலாளருக்கு செய்யப்படும் மேன்முறையீடுகள்.

51. கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் பிரிவுகள் 59 இன் கீழ் ஏதேனும் மேன்முறையீடு பற்றிய அமைச்சரது கட்டளை முடிவானதாகும். அமைச்சருக்கு செய்யப்படும் மேன்முறையீடுகள்.

52. ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கருமங்களை நடாத்துவதற்கு, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 56 ஆம் பிரிவின் கீழ் ஒருவர் அல்லது பலர் நியமிக்கப்பட்டால் கலைக்கப்பட்ட நிர்வாக சபையின் உறுப்பினர் சங்கத்தின் முழுத் தொழிலையும் சங்கத்தின் புத்தகங்களும் ஆவணங்களும் உட்பட மற்றும் சகல ஆதனங்களையும் பதிவாளர் குறிப்பிடும் காலத்துக்குள் குறித்த அவரிடம் அல்லது அவர்களிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

பதிவாளரால் நியமிக்கப்பட்ட அத்தகைய ஒருவரிடம் அல்லது பலரிடம், சங்கத்தின் முழுத் தொழிலையும், சங்கத்தின் புத்தகங்களும் ஆவணங்களுமுட்பட, மற்றும் சகல ஆதனங்களையும் ஒப்படைக்கக் குறித்த நிர்வாக சபை தவறுமேயாயின், அந்நிர்வாக சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் குற்றமொன்றினைப் புரிந்த குற்றவாளியாவர்.

உறுப்பினரல்லாத வரோடு கொடுக் கல் வாங்கல்.

53. கூட்டுறவுக் கொள்கைகளோடு முரண்படுமென அல்லது பதிவுபெற்ற சங்கங்களின் விசேட உரிமைகளைப் பிழையான முறையில் செலுத்துவதாகுமென அல்லது வருமான வரியினின்றும் தப்பிக் கொள்வதாகுமென அல்லது அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் ஏதேனும் கட்டளைகளை அல்லது விதிகளை மீறுவதாகுமெனப் பதிவாளர் நினைக்கின்ற அத்தகைய கொடுக்கல் வாங்கல் ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் உறுப்பினரல்லாதவரோடு செய்வதைப் பதிவாளர் தடுக்கலாம் அல்லது மட்டுப்படுத்தலாம்.

குற்றங்கள்.

54. நியதிச் சட்டத்தின் விசேடமாக குறிப்பிடப்படாதனவாக இருந்தால் கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் கீழ் வருகின்ற குற்றங்களுக்கு அளிக்கப்படும் தண்டனையைப் போலவே இவ்விதிகளின் கீழ் வருகின்ற குற்றங்களுக்கும் அளிக்கப்படும்.

அர்த்த நிரூபனம்.

55. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலே தவிர இந்த நியதிச்சட்டத்தில்,

''நியதிச்சட்டம்'' என்பது 2011 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஊவா மாகாண கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டம் .

''பதிவாளர்'' என்றால் இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் ஊவா மாகாண சபையில் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவாளரின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒருவர் என்பது கருத்தாகும்.

''சங்கம்'' என்றால் இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் அல்லது யூனியன்.

முரன்பாடுகள் தோன்றினால் சிங்கள உரையே மேலொங்கி நிற்றல்.

56. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையில் முரன்பாடு தோன்றும் பட்சத்தில் சிங்கள உரையே அமுல்படுத்தப்பட வேண்டும்.

**அட்டவணை**

பதிவத்தாட்சிப்பத்திரம் - மாதிரிப்படிவம்

(விதி 4)

............................................ சங்கத்தை ............................... உத்தரவாதமுள்ள கூட்டுறவுச் சங்கமாக 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் நியதிச் சட்டத்தின் 8 (1) ஆம் பிரிவின் கீழ் மேற்குறிப்பிட்ட பெயருடனும்.................................. என்ற முகவரியுடனும் இன்று பதிவு செய்ததாக இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................................................
ஊவா மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்.

திகதி :..............................

10– 183

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.